16th March 1960]

(b) if so, the details of the representation made?

THE HON. SRI P. KAKKAN : (a) & (b) A member of the Central Water and Power Commission visited Madras in June 1959 to have discussions with Madras Officers on the various points of dispute that have arisen between the Madras and the Mysore States in regard to the sharing of the Cauvery waters. The Madras Officers explained to the member that this Government were justified in taking up the execution of the Mettur Canals Scheme, the Kattalai High-Level Canal Scheme and the Pullambadi Scheme.

* 402 Q.—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Works be pleased to state the various inter-State disputes in which our State is involved, that have been referred to the Central Water and Power Commission?

THE HON. SRI P. KAKKAN : No inter-State dispute in which this State is involved has been referred to the Central Water and Power Commission. But certain disputes relating to the Parambikulam-Aliyar Project were referred to the Planning Commission which has in its turn referred to the Central Water and Power Commission. In regard to certain disputes relating to Madras-Mysore Agreements, the Mysore Government have referred the matter to the Government of India, Ministry of Irrigation and Power, who deputed a member of the Central Water and Power Commission to enquire into the matter.

* 403 Q.—SRI S. M. ANNAMALAI : Will the Minister for Works be pleased to state whether the Government of Mysore have invited this Government for talks on the utilization of the Cauvery waters?

THE HON. SRI P. KAKKAN : Yes, Sir.

**SRI S. LAZAR :** ஸார், அதிகப்படியான நிலங்கள் மைசூரில் சாகுபடி செய்யப்படுகிறதா என்று கேட்டதற்கு அமைச்சர் அவர்கள் தகவல் இல்லையென்று சொன்னார்கள். இது சம்பந்தமாக கனம் அங்கத்தினர் ஸ்ரீநிவாச அய்யர் அவர்கள் நேரிலே பார்த்து விட்டு ஒரு யதாஸ்து தயாரித்து சர்க்காரிடம் சமர்ப்பித்துள்ளார்களா? அதன் பேரில் ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டதா?

**THE HON. SRI P. KAKKAN :** அந்தத் தகவல் எனக்குத் தெரியாது. அவர் சமர்ப்பித்திருந்தால் கவனிக்கிறேன்.

**SRI K. SATTANATHA KARAYALAR :** இந்த ஒப்பந்தப்படி நம் பக்கத்தில் கிடைக்கவேண்டிய தண்ணீர் முழுவதையும் பயன்படுத்திக் கொள்ளுகிறோமா?

**THE HON. SRI P. KAKKAN :** பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

[16th March 1960

SRI K. RAMACHANDRAN : வாட்டர் பவர் கமிஷனிடத்தில் இந்தத் தண்ணீர்த் தகராறைப்பற்றி மைசூர் சர்க்கார் "ரெப்ரெசன்டேஷன்" கொடுத்திருப்பதாகத் தகவல் சொன்னார்கள். இதைப் பொறுத்து நம்மை ஏதேனும் கேட்டிருக்கிறார்களா ?

THE HON. SRI P. KAKKAN : மைசூர் சர்க்கார் மத்திய சர்க்காரிடத்திலும் புள்ளம்பாடியிலும், மேலைக் கட்டளைக் கால்வாயிலும் தண்ணீர் எடுக்கிறார்கள், 1924-ம் வருஷ அக்ரிமெண்ட் சரியல்ல என்று சொல்லியிருக்கிறார்கள். அங்கிருந்து சென்ட்ரல் வாட்டர் and பவர் கமிஷன் அங்கத்தினர் வந்து பேசிவிட்டுப் போயிருக்கிறார், பின்னர் முடிவு தெரியும்.

SRI A. GOVINDASAMY : காவேரியிலிருந்து அனாவசியமாக தண்ணீர் கடலிலே கலக்கிறது. அதை வெள்ளாற்றுக்கு 'லிப்ட் இரிகேஷன் ஸிஸ்டம்' மூலம் கொண்டுவர அரசாங்கம் யோசிக்குமா ?

THE HON. SRI P. KAKKAN : மதிப்பிற்குரிய அங்கத்தினர் வேறு கேள்வி கேட்கிறார். அவர் கேட்ட கேள்விக்கும் மூலக் கேள்விகளுக்கும் சம்பந்தம் இல்லை.

SRI A. A. RASHEED : May I know whether in regard to this dispute with the Mysore Government there was any arbitration and an award given?

THE HON. SRI P. KAKKAN : There was no arbitration.

SRI S. M. ANNAMALAI : மைசூர் சர்க்காருடைய அழைப்பை இந்தச் சர்க்கார் ஏன் ஏற்றுக்கொள்ளவில்லை ?

THE HON. SRI P. KAKKAN : ஏற்றுக்கொள்ளவில்லை என்பது அல்ல. ஏற்றுக்கொண்டிருக்கிறது. இருந்தாலும் அவர்களுடன் பேசுவதற்கு முன்பாக இந்த மாகாணத்திலுள்ள பிரதம நீர்ப்பாசன இன்ஜினீரிடம் கலந்த பிற்பாடுதான் மைசூர் சர்க்காரோடு பேசுவதாக எழுதியிருக்கிறோம்.

SRI M. C. MUTHU KUMARASWAMY : வளம் பொருந்திய தஞ்சை ஜில்லாவிலே இன்னும் சில தாலூகாக்கள் நஞ்சைக்கு லாயக்காக இருந்துங்கூட, தண்ணீர் இல்லாத காரணத்தால் புஞ்சையாகவே இருந்துகொண்டு வருகின்றன. ஆகவே, இப்பொழுது கொடுக்கும் தண்ணீர் அளவை அதிகப்படுத்த இந்த அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ? அல்லது வேறு முறையில் கொடுக்க வழிவகை செய்யுமா ?

DEPUTY SPEAKER : இந்தக் கேள்விக்கும் மூலக் கேள்விக்கும் சம்பந்தம் இல்லை.

THE HON. SRI P. KAKKAN : தனியாகக் கேள்வி போட வேண்டும்.

16th March 1960]

**SRI K. VINAYAKAM:** காவிரி ஆற்றில் வரும் தண்ணீரை, சென்னை அரசாங்கமும், மைசூர் அரசாங்கமும் எவ்விதத்தில் எப்படிப் பங்கு போட்டுக்கொள்வது என்பது பற்றிய ஒப்பந்தம் எந்த ஆண்டில் ஏற்பட்டது? அந்த ஒப்பந்தம் எப்பொழுது முடிகிறது. அதிலே இருக்கும் சிக்கல்கள் பொதுமக்களுக்குச் சரியாக விளங்கும்படி ஒரு வெள்ளை அறிக்கையை அரசாங்கம் வெளியிடுமா? அதன்மீது இருக்கும் உண்மைகளைத் தெரிந்து கொண்டு எவ்விதத்தில் பரிகாரம் தேடுவதற்கு அரசாங்கம் முயற்சிக்கும்?

**THE HON. SRI P. KAKKAN:** ஏற்கனவே மைசூர் சர்க்காரும் இந்த சர்க்காரும் 1924-ம் வருஷத்தில் ஒப்பந்தம் செய்து கொண்டன. மீண்டும் ஏதாவது கூட்டுவது, குறைப்பது பற்றி பரிசிலனை செய்ய வேண்டுமானுல், அது 1974-ம் வருஷத்தில்தான் செய்யவேண்டும் என்று ஏற்கனவே முடிவு செய்திருக்கிறார்கள். அவர்களும் நாமும் பேசுவதாக இப்பொழுது முடிவு செய்திருக்கிறோம். அவர்களுடன் பேசியதற்குப் பிறகு ஏற்படும் முடிவுகள் மக்களுக்குத் தெரிவிக்கப்படும்.

**SRI K. SATTANATHA KARAYALAR:** பாம்பிக்குளத் தண்ணீரைப்பற்றி இரண்டு இராஜ்ய சர்க்கார் உத்தியோகஸ்தர்களும் மத்திய சர்க்காரைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்களும் கலந்து பேசினதாக மந்திரி அவர்கள் சொன்னார்கள். இதே பதில்தான் கேரள சட்டசபையிலும் சொல்லப்பட்டது. சர்க்கார் தரப்பில் பேசுவதற்கு ஏதாவது தேதி குறிப்பிடப்பட்டுள்ளதா? அப்படியானுல், அது எப்பொழுது நடக்கும்?

**THE HON. SRI P. KAKKAN:** சர்க்கார் தரப்பில் பேசுவதற்கு தேதி குறிப்பிடப்படவில்லை.

**SRI K. RAMACHANDRAN:** மைசூர் சர்க்கார் மத்திய சர்க்காருக்குத் தகவல் கொடுத்ததன்பேரில் ஏற்பட்டிருக்கும் தகராறினுல் புள்ளம்பாடி, கட்டளைக் கால்வாய்களுக்குத் தண்ணீர் வராமல போகக்கூடிய நிலைமை ஏதேனும் இல்லாமல் இருக்கிறதா? அதைக் குறித்து இந்த சர்க்கார் என்ன செய்கிறது?

**THE HON. SRI P. KAKKAN:** அம்மாதிரி நிலைமை வராது என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**SRI A. GOVINDASAMY:** 'வெள்ளாறு' என்று நான் சொன்னதை அமைச்சர் அவர்கள் 'பெண்ணையாறு' என்று எடுத்துக்கொண்டார்கள். பெண்ணையாறு என்று நான் சொல்லவில்லை. காவிரியிலிருந்து கடலுக்கு வீணைகப் போகும் தண்ணீரை வெள்ளாற்றுக்குக் கொண்டுவருவதன் மூலம் வரண்டிருக்கும் பிரதேசங்களை நல்ல விவசாய நிலைக்குக் கொண்டுவர முடியும். அதனுல் 'லிப்ட் இரிகேஷன்' முறையில் கொண்டுவர முடியுமா என்று அமைச்சர் அவர்களைக் கேட்கின்றேன்.

[16th March 1960

THE HON. SRI P. KAKKAN : ஏற்கனவே, ப்ளானிங் கமிஷனுடைய அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டு, புள்ளம்பாடி, மேலக் கட்டளைக் கால்வாய்த் திட்டங்களை எடுத்துக்கொண்டிருக்கும் போதே தகராறு இருக்கும்போது, கனம் அங்கத்தினர் அவர்கள் இன்னும் ஜாஸ்தியாக வேறு இடத்திற்கு வேண்டுமென்று சொன்னால், எவ்வளவு தகராறு இருக்கும் என்று அவர்களே தெரிந்துகொள்வார்கள் என்று நம்புகிறேன்.

SRI A. VEDARATHNAM : கண்ணம்பாடி அணை மைசூரிலே இருக்கிறது. அவர்கள் தங்களுக்குத் தேவையான தண்ணீரை முழுதும் உபயோகப்படுத்திக் கொண்டு, உபரியை இங்கே கீழே பாசனத்திற்கு அனுப்புகிறார்கள். அப்படி வருகின்ற தண்ணீரைக் கடலுக்குப் போகாமல் இங்கே நாம் பாசனத்திற்கு உபயோகப் படுத்துவதைத் தவறு என்று அவர்கள் கருதுகிறார்களா? 'லோயர் ரீசஸ்' களில் பெய்யும் மழையால் காவிரிக்கு வரும் தண்ணீரை உபயோகப்படுத்துவதுகூட தவறு என்று அவர்கள் கருதுகிறார்களா? இதில் ஆட்சேபிக்கும் 'பாயிண்ட்' என்ன என்று தயவு செய்து அமைச்சர் அவர்கள் விளக்க முடியுமா?

THE HON. SRI P. KAKKAN : அவர்கள் ஆட்சேபணை சொல்வது —புள்ளம்பாடி, மேலக் கட்டளைத் திட்டங்கள் அப்பொழுது ஒப்பந்தத்தில் சேர்க்கப்படவில்லை என்பதே தவிர வேறொன்றும் இல்லை.

SR. J. MATHA GOWDER : மைசூர் அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தை நடத்தும்போது அன்னிய மொழி வேண்டாமென்று சொல்லக்கூடிய திராவிட நாட்டில் இருக்கக்கூடியவர்கள் தமிழ் மொழியில் பேசுகிறார்களா, அல்லது கன்னட மொழியில் பேசுகிறார்களா என்பதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.

DEPUTY SPEAKER : How does this Question arise? Next Question.

*Titanium and Bauxite deposits in the Nilgiris district*

* 404 *Q.*—SRI J. MATHA GOWDER : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) நீலகிரி ஜில்லாவில் டிட்டேனியம், அலுமினியம் தயாரிக்கும் பாக்சைட் படிவங்கள் ராஜ்ய பூமி ஆராய்ச்சிப் பிரிவு கண்டு பிடித்திருக்கிறார்களா?

(ஆ) ஆம் என்றால், ஒவ்வொன்றும் எவ்வளவு கிடைக்கும்? எந்தெந்த கிராமங்களில் கிடைக்கும்?

(இ) கிடைக்கக்கூடிய தாதுப்பொருள்களைக் கொண்டு நீலகிரி ஜில்லாவில் எஃகு தயாரிக்கும் தொழிற்சாலை ஏற்படுத்த சர்க்காருக்கு யோசனை உண்டா?